**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 12**

**Name** : திரு. பாலமுருகன்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07-09-2023.**

**(A1 to A3 present)**

முதல் விசாரணை -

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் போட்டோ ஸ்டுடியோ கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி கார்த்திகேயனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். எதிரி சரன்யா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். எதிரி ராஜசேகர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 2017ம் வருடன் 3வது மாதம் காலை 6 மணியளவில் நான் மங்கலம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயில் பக்கம் நானும், ஆனந்தராஜ் என்பவரும் சென்றோம். அங்கு கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். அங்கு நாங்கள் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடன் போலீசாரும் இருந்தார்கள். ரமேஷ் என்பரை கொலை செய்து விட்டார்கள் என்றும் அதற்கு சாட்சியாக இருக்கும் படி போலீசார் கேட்டார்கள். ஆஜர் எதிரிகள் 3 பேரும் ரமேஷ் கொலை சம்மந்தமாக வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டேன். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7, பின்னர் இறந்து போன ரமேஷ் வீட்டின் அருகே உள்ள முட்புதரில் இருந்த வெள்ளை நிற கயிறை 1ம் எதிரி அடையாளம் காட்டி எடுத்துக் கொடுத்தார் அதனை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றிக் கொண்டார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8, கயிறு சா.பொ.4. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

அ.சா.1 ரவி என் சொந்த தாய் மாமன். அ.சா.2 என் தாய், அ.சா.5 ரவியின் மனைவி. நான் கையொப்பமிட்ட இடத்தில் சுமார் 10 பேர் கூடி இருந்தார்கள். எங்களை அல்லாத, 3ம் தரப்பினர்களும் அந்த கூட்டத்தில் இருந்தார்கள். போலீசார் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள் பிறகு அதனை தட்டச்சு செய்து கொண்டு வந்ததில் நான் கையெழுத்து போட்டேன். போலீசார் குறிப்பு எடுத்த பேப்பரில் நான் கையெழுத்து போடவில்லை. தட்டச்சு செய்து கொண்டு வந்த பேப்பரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் தட்டச்சு எடுத்து வந்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் கையெழுத்து போட்டார்கள். குறிப்பு எடுத்துக் கொண்ட பேப்பரில் எதிரிகள் கையெழுத்து போடவில்லை. மறுபடியும் எதிரிகளை போலீசார் விசாரணை செய்யவில்லை, எதிரிகள் போலீசாரிடம் எதுவும் சொல்லவில்லை. கைப்பற்றுதல் மகஜர் கையால் எழுதப்பட்டது. அதில் நான் கையெழுத்து போட்டேன். இறந்து போன ரமேஷின் வீட்டிற்கு முன்புறம் உள்ள முள்புதரில் இருந்து கயிறு எடுக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட கயிறு ஆள்காட்டி மற்றும் நடுவிரல் சைஸ ில் இருக்கும். என்னுடைய கைவிரல் இரண்டும் சேர்த்தால் 3 செ.மீ இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. கயிறானது சுமார் 2 மீட்டர் அளவு இருக்கும். அந்த கயிறானது வெள்ளை நிறத்தில் இருந்தது. அந்த கயிறு ஒரு பக்கம் முடிச்சு போட்டு இருந்தது, இரண்டு பக்கமும் முடிச்சு போடப்படவில்லை. அந்த கயிற்றை அவ்வளவு தான் நான் பார்த்தேன். என் முன்னிலையில் அந்த கயிறு கைப்பற்றப்படவில்லை என்றும், அனைத்து ஆவணங்களையும் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றும், என் முன்பு எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, 2, 5 ஆகியோர் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் முன்பு நான் சொல்வது போல் சா.பொ.4 எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- பாலமுருகன்.

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.